# ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்களின் செயற்பாடுகள் - ஓர் ஆய்வு

*ஜெயநந்தினி ந.யோ*[1], *செல்வராஜா.மா*[1]

## ஆய்வின் அறிமுகம்

ஆரம்பப்பிள்ளைப்பருவம் என்று சொல்லும் போது அது பாடசாலை புகாநிலைப்பருவத்தையே குறிக்கின்றது. இப்பருவமானது மிகவும் முக்கியத்துவமுடையதும் அதிக சிரத்தை கொள்ளப்பட வேண்டிய பருவமுமாகும். மூன்று தொடக்கம் ஐந்து வயதுப்பருவத்தினரையே ஆரம்பப்பிள்ளைப்பருவத்தினர் எனலாம். இவ் வயதுச் சிறாரின் கல்வி பற்றி இக்காலத்தில் மிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசப் படுகின்றது. இது முன்பள்ளிக்கல்வி அல்லது ஆரம்பப்பிள்ளைப்பருவக் கல்வி என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. இந்த முன்பள்ளிக்கல்வியை வழங்கும் நிறுவனங்கள் இன்று உலகலாவிய ரீதியில் பல்கிப் பெருகியுள்ளன.

ஒவ்வொரு தனி மனிதனும் கல்வியினூடாகத் தனது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றுடன் தனது உள்ளார்ந்த ஆளுமை விருத்தியையும் மேம்படுத்திக் கொள்கின்றான். அத்தகைய ஆளுமை விருத்தியே அவனுடைய சமூகப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வலுவையும் கொடுக்கின்றது. இவ் ஆளுமை விருத்தியானது இளமையிலேயே பிள்ளைகளிடம் உருவாகின்றது. இதனை ஆய்வாளர்களும் அவதானித்துள்ளனர். இளம் பருவத்திலேயே முக்கிய கற்றல் நிகழ்வுகளும், கற்கும் ஆற்றலும் அவற்றைப் பற்றிக் கொள்ளும் அளவும் நிகழ்கின்றன. நடத்தைக் கோலங்கள் படிப்படியாக இடம் பெறுகின்றன. சமூக விழுமியங்கள் பிள்ளைகளைத் தழுவிக் கொள்ளுகின்றன. அவை அப்படியே அவர்களிடம் நிலைத்து விடுகின்றன என்பதனை கல்வியியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். சாதாரண சிறு திருப்பம் அல்லது மாற்றம் நீண்ட நாட்பயனை அளிக்கும் வாய்ப்பைத் தருகின்றது. சிறு வயதில் ஒரு நிகழ்வின் போது பெறும் அனுபவம் வாழ்க்கை முழுவதும் நிலைத்து விடும்.

இப்பருவத்திலேதான் இப்பிள்ளைகள் முறையான ஆரம்பக்கல்வியைப் பெற உற்சாகப்படுத்தப்படுகின்றனர். இப்பருவத்துப் பிள்ளைகளின் செயற்பாடுகளில் குறைபாடுகள் காணப்படின் அது அவர்களது ஆரம்பக் கல்வியிலும் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது. இதன் காரணமாகப் அப் பிள்ளைகளினால் தமது ஆரம்பக் கல்வியைச் சிறப்பானதாகக் கொண்டு செல்ல முடியாத நிலையும் தோன்றும். இதன் போது பிள்ளையின் விருத்தி தடைப்படும்.

ஆரம்பப்பிள்ளைப்பருவத்திலே குறிப்பான விருத்திச் செயற்பாடுகள் பிள்ளையில் ஏற்படுகின்றன. அந்த வகையில் சமூகவிருத்திச் செயற்பாடு, மொழிவிருத்திச் செயற்பாடு, உளவிருத்திச் செயற்பாடு, நுண்மதி விருத்திச் செயற்பாடு, உடல்வளர்ச்சிச் செயற்பாடு நடத்தைவளர்ச்சிச் செயற்பாடு, அழகியல் உணர்வு விருத்திச் செயற்பாடு, மனவெழுச்சிவளர்ச்சிச் செயற்பாடு, பண்பாட்டு வளர்ச்சிச் செயற்பாடு, பாதுகாப்புத் தொடர்பான விருத்திச் செயற்பாடு போன்றவற்றை குறிப்பிடமுடியும். வாழ்க்கைக்கு ஆயத்தமாகும் பிஞ்சுப்பருவத்தில் இவ்வகையான விருத்திச் செயற்பாடு தொடர்பாக உறுதியான அத்திவாரம் இடப்படுகின்றது. இவ் அத்திவாரம் இடப்படும் நிலையமாக ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்கள் காணப்படுகின்றன. இந்தவகையில் ஆரம்பப்பிள்ளைப்பருவநிலையங்களின் செயற்பாடுகள் ஆரம்பப்பிள்ளைப்பருவத்திலே முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. ஆக ஆரம்பப் பிள்ளைப்பருவத்தில் மேற்கொள்ளப்படும் இச் செயற்பாடுகள் பற்றி ஆராய்வது மிகவும் அவசியமானது.

## ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வின் பிரதான நோக்கானது ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 05 ஆரம்பப்பிள்ளை பருவ நிலையங்களின் செயற்பாடுகள் பற்றிய தற்போதைய நிலையை மதிப்பிடலும் அச்செயற்பாடுகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான உபாயங்களை இனங்கண்டு உயிர்த்துடிப்புள்ள சமநிலைத்தன்மை கொண்ட ஆரம்பப்பிள்ளைப் பருவ நிலையங்களை

[1] Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

உருவாக்குவதுமேயாகும். இதனடிப்படையில் இதன் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களாக பின்வருவன அமைகின்றன.

ஆரம்பப் பிள்ளைப்பருவச் செயற்பாடுகள் குறித்து ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் அக்கறையை இனங்காணல், ஆரம்பப்பிள்ளைப்பருவத்தினரின் விருப்புக்களுக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது என்பதை இனங்காணல், ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்களின் செயற்பாடுகளினது சமநிலைத்தன்மையை இனங்காணல், ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற சூழலின் முக்கியத்துவத்தை இனங்காணல், ஆரம்பப்பிள்ளைப் பருவத்தினரின் விளையாட்டிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை இனங்காணல், ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்தி நிலையினை இனங்காணல் போன்றவற்றுடன், ஒரு ஆரம்ப பிள்ளைப்பருவத்தின் நோக்கங்களாக காணப்படும் சமூக விருத்தி, உளவிருத்தி, நுண்மதி விருத்தி,உடல் வளர்ச்சி, நடத்தை வளர்ச்சி,அழகியல் உணர்வு விருத்தி,மனவெழுச்சி வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பாதுகாப்பு தொடர்பான விருத்தி என்பவற்றை ஆரம்ப பிள்ளைப்பருவத்தினருடையே அமைதியான உறுதியான உயிர்த்துடிப்புள்ள விளையாட்டு அனுபவங்களை கொண்டு உருவாக்குவதுடன் இவ் ஆரம்ப பிள்ளை பருவ செயற்பாடுகளில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்து திறமையான முறையில் சமநிலைத்தன்மை கொண்டதாக இவ்நிலையங்கள் செயற்பட அனைவருக்கும் ஆலோசனைகளை வழங்குதல் போன்றவையே இவ் வாய்வின் நோக்கங்களாகும்.

கற்றல் நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணிகளுட் சில நேரடியாகவும் வேறு சில மறைமுகமாகவும் கற்றல் தொழிற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கற்கும் பிள்ளை, அவன் கற்கும் பாடவிடயம், கற்பதற்கு நேரடியாக உதவி புரியும் ஆசிரியர், ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டிய பெற்றோரும் சமூதாயமும், இவற்றை நிறைவேற்றி வைக்கும் நிறுவனங்களும் அவற்றின் முகாமை முறைகளும் எனப்பல தரப்புடன் தொடர்புடையவையாக இக்காரணிகள் காணப்படுகின்றன. இவை கற்றல் நிகழ்வில் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ செல்வாக்குச் செலுத்துகின்றன. சாதகமானவற்றை மேலும் வினைத்திறன்மிக்கதாக்குவதுடன் சாதகமற்றவற்றை நீக்கி அல்லது அவற்றின் தாக்கவிளைவினைக் குறைத்து சாதகமாக மாற்றும் பொறுப்பு கல்விப்புலத்தைச் சார்ந்த அனைவருக்கும் உண்டு. இத்தகையதோர் பின்புலத்தின் அடிப்படையிலையே ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச ஆரம்பப் பிள்ளைபருவ நிலையங்களின் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை உணர வைத்து அவற்றில் காணப்படும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்த ஆய்வு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு வினாக்கள்**

1. ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடுகள் குறித்து ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் அக்கறை எவ்வாறு உள்ளது?
2. ஆரம்பப்பிள்ளைப்பருவத்தினரின் விருப்புக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதா?
3. ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்களின் செயற்பாடுகள் சமநிலைத்தன்மை கொண்டவையாக இயங்குகின்றனவா?
4. ஆரம்பப்பிள்ளைப்பருவச் செய்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற சூழல் ஆரம்பபிள்ளைப்பருவ நிலையங்களில் காணப்படுகின்றனவா?
5. ஆரம்பப்பிள்ளைப்பருவத்தில் ஏற்படும் வளர்ச்சிகளை விருத்தியடையச் செய்வதற்கு விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதா?
6. ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்தி திருப்திகரமான நிலையில் உள்ளதா?

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வுத்துறையிலே புதிதாக ஆய்வினை மேற்கொள்ளும் ஒருவருக்கு ஆய்வின் முதற்படியாக அவ்விடயம் பற்றிய அறிவு மிகவும் அவசியமாகின்றது. குறிப்பிட்ட ஆய்விற்குள் பிரவேசிக்கும் ஒருவர் தன்னால் மேற்கொள்ளப்படும் ஆய்வின் விடயம் தொடர்பாக அல்லது அதனை ஒத்த விடயங்கள் தொடர்பாக ஏனையவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை, கண்டுபிடிப்புகளை அறிக்கைகளை அல்லது வெளியிட்ட கருத்துகளை அவதானிப்புகளை வாசித்து அறிந்து கொள்வதனூடாக அவற்றைப் பயன்படுத்தி தனது ஆய்வின் நோக்கங்களையும், ஆய்வு முறைமைகளையும், ஆய்வின் தன்மையையும், ஆய்வின் மட்டுப்பாடுகளையும் சிறப்பாக வரையறை செய்து கொள்ள முடியும். இதனாலேயே எந்த ஒரு முயற்சியிலும் ஆய்வு தொடர்பான இலக்கிய மீளாய்வு செய்வது என்பது அவசியமானதாகின்றது.

அந்தவகையில் இவ் ஆய்விலே ஆரம்பப்பிள்ளைப் பருவத்தின் முக்கியத்துவம் தொடர்பாக கல்வியியலாளர்கள் கூறிய கருத்துக்களும், ஆரம்பப்பிள்ளைப் பருவத்தினரின் செயற்பாடுகளான, உடல் விருத்திச் செயற்பாடுகள், ஆக்கதிறன் அழகியல் விருத்திச் செயற்பாடுகள், ஆக்க

EUSL

திறன் செயற்பாடு, அழகியல் திறன் செயற்பாடு, ஆக்க திறன் அழகியல் விருத்தி செயற்பாடுகளில் சித்திரம், ஆக்கதிறன் அழகியல் விருத்தி செயற்பாடுகளில் சித்திரம் தொடர்பான ஆய்வுகள், ஆக்கதிறன் அழகியல் விருத்தி செயற்பாடுகளின் இசை,நடிப்பாற்றலின் முக்கியத்துவம், மொழி விருத்திச் செயற்பாடுகள்,கேட்டல் திறன் விருத்திச் செயற்பாடுகள், வாசிப்பு திறன் விருத்திச் செயற்பாடுகள், எழுத்துத்திறன் விருத்திச் செயற்பாடுகள், கணிதக்கரு விருத்திச் செயற்பாடுகள், சூழலைப் புரிந்து கொள்ளும் செயற்பாடுகள், சமூக மனவெழுச்சிச் செயற்பாடுகள், அத்துடன் ஆரம்பபிள்ளைப்பருவத்தினரின் செயற்பாடு களில் விளையாட்டுச் செயல்களின்பங்கு, விளையாட்டு பற்றிய கொள்கை ஆய்வுகள் போன்ற விடயங்கள் இவ் ஆய்வின் இலக்கிய மீளாய்வாக அமைகின்றன.

**ஆய்வு முறைமையியல்**

இவ் ஆய்வினை செய்து முடிப்பதற்கு ஆய்வாளரினால் அளவைநிலை ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வு முறையானது ஏனைய துறைகளிலும் பார்க்க கல்வியியற் துறையில் மிகப் பிரபலமாகவுள்ளது. பரப்பள வாய்வு முறை என்னும் பெயரினால் இவ் ஆய்வு முறை அழைக்கப்படுகின்றது. ஓர் ஆய்வாளரின் ஆய்வுப்புலத் திலே காணப்படுகின்ற பல்வேறு நிகழ்வுகளையும் நிலைப்பாடுகளையும் விபரித்து ஒப்பீடு செய்து வகைப் படுத்தி அவற்றிற்கு விளக்கம் அளிக்கும் செயற்பாடாக இவ் ஆய்வு அமைகின்றது. அளவீட்டு ஆய்வு முறை பற்றி ஆய்வு நூலாசிரியரான Br.O.G.R.Walter [1987] தனது நூலில், அளவீட்டு ஆய்வுக் குடித்தொகையிடம் வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய நுட்பங்கள் மூலம் மக்களின் கருத்துக்கள் மனப்பாங்குகளை சாதகமான விருப்புடனான உறவின் மூலம் மக்களின் கருத்துக்களை அறிய மிகச் சிறந்த நுட்பமாகும் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு காணப்படும் ஆய்வு முறையான அளவை நிலை ஆய்வு முறையைப் பயன்படுத்தி தகவல்கள் திட்டமிடப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுக் குடித்தொகை**

இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசமே ஆய்வுப் பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டது. இப் பிரதேசத்தில் 61 ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்கள் காணப்படுகின் றன. இவற்றிலே 2726 ஆரம்பப்பிள்ளைப்பருவத்தினரும் 147 ஆரம்பப் பிள்ளைப்பருவ ஆசிரியர்களும் காணப்படு கின்றனர். இவற்றிலே எழுமாற்றாக ஏஞ்சல் மொண்டிசூரி, பாரதி முன்பள்ளி, மெதடிஸ் முன்பள்ளி , செரோன்றோஸ் முன்பள்ளி, மீகாவேல் முன்பள்ளி என 05 ஆரம்பப் பிள்ளைப்பருவ நிலையங்கள் ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டன. இவ் ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்க ளிலிருந்து 552 ஆரம்பப்பிள்ளைப்பருவத்தினரும் 20 ஆசிரியர்களும் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட 50 பெற்றோர்களும் ஆய்வுக் குடித்தொகையாகக் காணப்படு கின்றனர்.

**தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும்**

இந்த ஆய்வின் நோக்கங்களை எய்துவதற்காக ஆரம்பப் பிள்ளைப்பருவத்தினரின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பல விடயங்களை வெளிக்கொணரும் வகையில் தரவு சேகரிப்பு நுட்பங்களாக நேரடி வினாக்கொத்து முறை, நேரடி அவதானம் போன்றவை பயன்படுத்தப்பட்டது. ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்களையும், நேரடி அவதானத்தின் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டே பகுப்பாய்வு இடம் பெற்றுள்ளது.

**ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்ட பிரச்சினைகள்**

இப் பகுப்பாய்வின் வாயிலாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. இருப்பினும் அவை அனைத்திற்கும் உடனடியாக தீர்வு கண்டுவிட முடியாது. ஆய்வின் குறிக் கோள் அதன் வெற்றி என்பவற்றைக் கருத்திற் கொண்டு பின்வரும் பிரச்சினைகள் முக்கியமானவையாக வெளிக் கொணரப்படுகின்றது.

- ஆரம்பப்பிள்ளைப்பருவ செயற்பாடுகள் குறித்து ஆசிரி யர்களினதும் பெற்றோர்களினதும் அக்கறை திருப்திகர மானதாக இல்லை.
- ஆரம்பபிள்ளைப்பருவத்தினரின் விருப்புக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.
- ஆரம்பபிள்ளைப்பருவ நிலையங்களின் செயற்பாடுகள் சமநிலைத்தன்மை கொண்டவையாக இயங்குவதில்லை.
- ஆரம்பபிள்ளைப்பருவ செயற்பாடுகளை முன்னெடுப்ப தற்கு ஏற்ற சூழல் ஆரம்பபிள்ளைப்பருவ நிலயங்க ளில் காணப்படுவதில்லை.
- ஆரம்பபிள்ளைப்பருவத்தில் ஏற்படும் வளர்ச்சிகளை விருத்தியடையச் செய்வதற்கு விளையாட்டிற்கு ஓரளவு முக்கியத்துவமே அளிக்கப்படுகின்றது.
- ஆரம்பபிள்ளைப் பருவ செயற்பாடுகளை முன்னெடுப் பதற்கு ஆசிரியர்களின் தொழில் வாண்மை விருத்தி திருப்திகரமான நிலையில் இல்லை.

இவ் வகையான பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமோ அல்லது குறைத்துக் கொள்வதன் மூலமோ சிறந்த முறையில் ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடிவதோடு பூரணமான விருத்தியுள்ள

ஆரம்பப்பிள்ளைப்பருவத்தினரை உருவாக்க முடியும் என்பது தெளிவான உண்மை.

**தீர்வுகளும் ஆலோசனைகளும்**

ஆய்வினைப் பொறுத்தவரையில் ஆய்விலே இனங் காணப்பட்ட பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் மிக மிக முக்கியமானவை. பிரச்சி னையை இனங்காண்பதோடு நின்றுவிடாது அதற்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைக்கும் போதே குறித்த ஆய்வானது முழுமை பெறுகின்றது. தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைக்கும் போது பிரச்சினைகளையும் ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும்.

அந்த வகையில் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 05 ஆரம்பபிள்ளைப்பருவ நிலையங்களின் செயற்பாடுகள் பற்றிய இந்த ஆய்வில் பிரச்சினைக்கான தீர்வுகளும் அவற்றுடன் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளும் பின்வருமாறு அமைந்துள்ளது.

அந்த வகையில் ஆரம்பப்பிள்ளைபருவச் செயற்பாடுகள் தொடர்பாக அக்கறையில்லாது காணப்படும் ஆசிரியர்க ளுக்கு ஆரம்பபிள்ளைபருவ செயற்பாடுகளின் முக்கியத் துவத்தை உணரவைக்க வேண்டும். ஆரம்பப்பிள்ளை பருவச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகளுக்கு செல்வதற்கு ஆசிரியர்களை ஊக்குவிக்க வேண்டும். அதற்கு பயிற்சி வகுப்புக்களுக்கு வருகை தரும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், பணத்தொகை வழங்குதல் போன்ற வெகுமதிகளை கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். ஆரம்பப்பிள்ளைபருவ நிலையங் களுக்கு தேவையான உபகரண வசதிகளை நிறுவனங் களின் உதவிகளின் மூலம் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களின் வேதனத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆரம்பப்பிள்ளைபருவச் செயற்பாடு களில் பிள்ளைகள் திறமையாகச் செயற்படாவிட்டால் அது அவர்களது முழுமையான வளர்ச்சியில் எவ்வகையான பாதிப்பை உண்டு பண்ணும் என்பதை ஆசிரியர்களுக்கு விளங்க வைத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இதனைப் போலவே பெற்றோர்களுக்கும் ஆரம்பப்பிள்ளை பருவக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்களின் வருமானத்தை அதிகரிக்க அவர்களுக்கு சிறுகைத்தொழிலை ஊக்குவிக்க வேண்டும். பெற்றோர்களுக்கு கல்வியறிவை வழங்குவதற்கு ஏற்பாடு களை மேற்கொள்ள வேண்டும். ஆரம்பப் பிள்ளைபருவத் தினரின் செயற்பாடுகளை ஊக்குவிக்க பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

பிள்ளைகளின் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர்களது விருப்பங்களை நிறைவேற்றுவதன் அவசியத்தை பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விளங்கவைக்க வேண்டும். பிள்ளைகளது விருப்பங்கள் நிறைவேற்றப்படாதுவிடின் அது அவர்களது விருத்தியில் எவ்வகையான தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதை இரு சாராருக்கும் புரிய வைத்தல் வேண்டும். விஷேட தேவையுள்ள பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்தல் வேண்டும். விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு விஷேடமான விருப்புக்கள் தேவைகள் உண்டு என்பதை ஆசிரியர்கள் இனங்கண்டு கொள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும். பிரத்தியேக வகுப்புக்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்வதனைக் குறைத்து அவர்களது விருப்பங்களை புரிந்து கொண்டு சுதந்திரமாக செயற்பட வைக்க பெற்றோர் முன்வர வேண்டும். வெளி இடங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்ல முன்வர வேண்டும். பிள்ளைகள் விரும்பும் செயற்பாடான ஆக்கத்திறன் அழகியல் விருத்திச் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆரம்பபிள்ளைபருவ நிலையங்களிலும் சமநிலைத்தன்மை கொண்டதாக செயற்பாடுகள் நடை பெற வைத்தல் வேண்டும். பெற்றோர்களுக்கு ஆரம்ப பிள்ளைப் பருவத்தினரின் செயற்பாடுகள் குறித்து அறிவினை வழங்குதல் வேண்டும். எழுத்து வாசிப்புச் செயற்பாடுகளைப் போன்று ஏனைய செயற்பாடுகளும் ஆரம்பபிள்ளைபருவத்தினருக்கு மிக மிக அவசியமா னவை என்பதை பெற்றோர்களுக்கு விளங்க வைத்து அவை தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஆரம்பபிள்ளைபருவத்தினரின் செயற்பாடுகளில் சமூக மனவெழுச்சிக்குரிய செயற்பாடுகளை பிள்ளைகளி டையே செயற்படுத்த வேண்டும்.

செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற சூழலை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது தொடர்பாக பெற் றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விளக்கம் கொடுக்க வேண்டும். எல்லாவகையான செயற்பாட்டு மூலைக ளையும் அமைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் பாதுகாப்பு உள்ளதென்ற உணர்வோடு ஆறுதலாக இருந்து தேடுதல் நடத்தவும் ஓடியாடித் திரியவும் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இல்லையானால் அங்கு ஒழுங்கமைக்கப்பட்ட சாதனங்களும் பொருட்களும் பெறுமதியற்றவையாகிவிடும். அங்குள்ள பாதுகாப்பான பாத்திரமான சூழல் குழந்தைகளின் வயதிற்கும் ஆற்ற லுக்கும் பொருத்தமான சவால்களுக்கும் தடையாக இருக்கக் கூடாது. குழந்தைகள் ஒளித்து விளையாடும் மூலைகள் உணவருந்தும் இடம், குழந்தைகள் இடையீடு களின்றி பொருட்களை உருவாக்கவும் கையாளவும் தேவையான இடம் என்பன காணப்படுதல் வேண்டும்.

EUSL

பிள்ளைகள் சுதந்திரமாக செயற்படுவதற்கு ஏற்ற சூழலை அமைத்துக் கொடுத்து அவர்களது செயற்பாடுகளை ஊக்குவித்தல் வேண்டும்.

விளையாட்டின் வாயிலாக பிள்ளைகளிடம் அனேக விருத்திகள் ஏற்படுகின்றது என்பதையும் விளையாட்டு ஆரம்பப்பிள்ளைப் பருவத்தினருக்கு முக்கியமானது என்பதையும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விளங்க வைக்க வேண்டும். பெற்றோர்கள், பிள்ளைகள் விளையாடுவதற்கு ஏற்ற பொருட்களை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்து அவர்களுடன் விளையாடுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். விளையாட்டின் மூலமே அனைத்துச் செயற்பாடுகளையும் செய்வதற்கு ஆசிரியர்கள் திட்டமிட வேண்டும். ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலை யங்களில் உட்புற வெளிப்புறச் சூழலானது பிள்ளைகள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் நன்றாக விளையாடுவ தற்கும் ஏற்றதாக அமைந்திருத்தல் வேண்டும்.

ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்தித் தேவைகளை அதிகரிப்பதற்கு சந்தர்ப்பங்களை உண்டுபண்ண வேண்டும். பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். ஆசிரியர்களின் ஓய்வு நேரங்களில் அவர்கள் தங்களது தொழில்வாண்மையை விருத்தியடையச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட அவர் களை ஊக்குவிக்க வேண்டும். ஏதாவதொரு வகையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடுகளை முன்னெடுக்க ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்தி அவசியம் என்பதை ஆசிரியர் புரிந்துகொள்ள அவர்களை வழிப் படுத்த வேண்டும்.

இவ் ஆய்வானது ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடு களையும் அவை ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்க ளிலும் பெற்றோர்களினாலும் எந்தளவிற்கு முன்னெடுக்கப் படுகின்றது என்பதையும் வெளிக்கொணர்கின்றது. இருப்பினும் ஆரம்பப்பிள்ளைப்பருவச் செயற்பாடுகள் ஆரம் பப்பிள்ளைப்பருவ நிலையங்களினாலும் பெற்றோர்களி னாலும் மிகவும் சிறப்பானதாக செயற்படுத்தப்படுகின்றன என்பதைத் திட்டவட்டமாக கூறமுடியாதுள்ளது. ஆரம்பப் பிள்ளைப்பருவச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை ஆசிரியர்களும் பெற்றோர்களும் சிறந்த முறையில் தெளி வாக விளங்கிக் கொள்வார்களாகில், அச்செயற்பாடுகளை ஆரம்பப்பிள்ளைப்பருவ நிலையங்களில் சிறந்த முறையில் செயற்படுத்தி சிறப்பானதொரு ஆரம்பப்பிள்ளைப்பருவச் சமூதாயத்தினரை உருவாக்க முடியும் என்பது வெள்ளி டைமலையாகும்.

**உசாத்துணை நூல்கள்**


சந்தானம்.எஸ் [1993] கல்வியியல் மனவியல் சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.

அலியார்.யூ.எல் [1995] கல்வியியல் நோக்கு, பைத்துள் வறிக்மா பதிப்பகம், கொழும்பு.

தணிகாசலம்பிள்ளை.ச.நா [1998] கல்வியியற் சிந்தனைகள், உதயன் பதிப்பகம், திருகோணமலை.

இராமலிங்கம்.ப. [2000] கல்வியும் உளவியலும், ராஜகுமாரி பதிப்பகம், சென்னை.

இஷாக்.என்.எம்.எம். [2002] கல்வியியல் கட்டுரைகள், தேசிய கல்வி நிறுவகம் மவறரகம.

இராஜேஸ்வரன்.ப [2005] கல்வியியலாளன், கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம்.

ஜெயராஜா.சபா [2005] குழந்தை உளவியலும் கல்வியும், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு

வறஸன்.எம்.எச்.எம். [2006] முன்பள்ளிக்கல்வி கலைத் திட்டமும் வழிகாட்டலும், தேசியகல்வி நிறுவகம், மவறரகம.

செல்வராஜா.மா [2006] முன்பள்ளிச்சிந்தனைகளும் செயற்பாடுகளும், கௌரி வெளியீட்டகம் மட்டக்களப்பு.

வஜ்ரவேலு.எஸ், விஜயா.கு. [2006] கல்வியின் புதுமைப் போக்குகள்,ஜோதி புத்தக நிலையம்,சென்னை.

சின்னத்தம்பி.க. [2007] கல்வி ஆய்வியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Ann miles gorden,Kathryn Williams [1995] Beginings and Beyond, Delmar publishers ITP,U.S.A.

Jo Ann Brewer [1995] Introduction to early childhood education; preschool through primary grades,U.S.A

Singh.u.k., Sudarsha.k.n [1996] Child education, Discovery , publishing House,New delhi.

Eva Essa,Rosemary young [2003] Introduction to early childhood education,Canada.

Bhoodev singh [1997] pre school education,publishing corporation, APH publishing.


EUSL